(மேசையைத் தட்டும் ஒலி) அதனால், அவர் சொன்னதைத் தாண்டி நான் எதுவும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. “இந்திய நாட்டின் முன்னேற்றத்துக்கு சாதியும், மதமுமே தடை” என்று சொன்ன அயோத்திதாசர், “மனிதர்களை மனிதர்களாகப் பார்க்கும் எவரோ, அவர்தான் மனிதர்” என்று முழங்கினார்.

1845 முதல் 1914 வரை வாழ்ந்த அயோத்திதாசர் அவர்களுடைய 175-வது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது அறிவை வணங்கும் விதமாகவும், வடசென்னைப் பகுதியில் மணிமண்டபம் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அறிவிப்பை வெளியிடுவதில் இந்த அரசு பெருமைப்படுகிறது.

மகான் புத்தரை ‘இரவு பகலற்ற ஒளி’ என்று சொன்ன அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய சிந்தனைகளும், இரவு பகலற்ற ஒளியாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும் என்று சொல்லி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டியலின மக்களுடைய முதல் போராளியாகத் திகழ்ந்த தாத்தா அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய புகழைப் போற்றுகின்ற வகையில் வடசென்னையில் அவருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த, அந்த அறிவிப்புக்கு புரட்சி பாரதம் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, பாராட்டுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

2021 செப்டம்பர் 3]

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மக்களின் உரிமைக் குரலாய் அந்தக் காலத்தில் ஏடுகளை எழுதி, கையடக்கப் பிரதிகளை வெளியிட்டு, தமிழ்ச் சமூகத்தின் விடியலுக்கு வித்திட்ட மாமேதை அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு, அவர் வாழ்ந்த வடசென்னை பகுதியில் நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினை உலகத் தமிழ்ச் சமூகத்தின் சார்பாகவும், திராவிட ஆய்வாளர்களின் சார்பாகவும் நெஞ்சார வாழ்த்தி, நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், யாரெல்லாம் இந்த தமிழ்ச் சமுதாயத்திற்குச் சேவையாற்றியிருக்கிறார்களோ அவர்களையெல்லாம் தேடிப் பிடித்து, பெருமை சேர்த்துக்கொண்டிருக்கின்றார். அவர் பெருமைசேர்ப்பது மட்டுமல்ல, இந்த இளைய சமுதாயத்திற்கு, எதிர்காலச் சந்ததிக்கு தங்களுடைய பண்பாட்டை, வரலாற்றை மறக்காமல் தெரிந்துகொள்ளக்கூடிய அந்த வேலையைச் செய்துகொண்டிருக்கின்றார்.*

அதேபோல, நாம் இன்றைக்குச் சிறப்பாகப் பணியாற்றினால், என்றாவது ஒருகாலத்தில் சிறப்பாகப் பணியாற்றுபவர்கள், நம்முடைய சட்டமன்றத்தில் பெருமை சேர்க்கப்படுவார்கள் என்ற ஒரு நம்பிக்கையை இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரேயொரு விஷயம், வருகின்ற 5 ஆம் தேதி கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களுடைய பிறந்த நாள் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *150-வது பிறந்தநாள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *150-வது பிறந்த நாள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து பெருமை சேர்ப்பாரா என்று இந்த நேரத்தில் அறிந்துகொள்ளவும் விரும்புகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு மிகப் பெரிய அளவில் சமூக நீதியின் ஒரு குன்றாக, வளர்ச்சியின் ஓர் எழுச்சியாக விளங்குகிறதென்றால் அதற்கு நிச்சயம் திராவிட கொள்கைதான் காரணமாக இருந்தது. அந்த அடிப்படையில், தந்தை பெரியார் அவர்களே குறிப்பிட்டதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, தந்தை பெரியார் அவர்களுடைய பாதைகளுக்கு முன்னோடியாக விளங்கிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல, தமிழ்ச் சமுதாயம் நிமிர்ந்து நிற்க வேண்டுமென்பதற்காக, பன்முகத் தன்மையில் சிறப்பான பணிகளைச் செய்தவர் அயோத்திதாசப் பண்டிதர். நிச்சயமாக அவரைப் பற்றி வருங்காலச் சமுதாயம் அறிய வேண்டும். இப்படிப்பட்ட வகையில் தமிழக மக்களுடைய, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக, தமிழ் மொழியின் எழுச்சிக்காக, தமிழ் மக்களின் உரிமைக்காக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** பாடுபட்டவர்களையெல்லாம் வரிசையாக நினைவுக்கூரக்கூடிய வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அரசு, பல்வேறு பணிகளைச் செய்கின்றது. அந்தவகையில் வட சென்னையில் அயோத்திதாசப் பண்டிதருக்கு மணிமண்டபம் கட்டக்கூடிய இந்த அறிவிப்பை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழன், திராவிடன் என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி, மனிதனை மனிதனாக நினைப்பவனே மனிதன் என்ற கொள்கையைக்கொண்டு, தமிழுக்கும், திராவிடத்துக்கும் பெருமை சேர்த்த நம் பெருமைக்குரிய அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு வட சென்னையில் மணிமண்டபம் அமைப்போம் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தது, தமிழகத்தில் வாழ்கின்ற, இந்தியாவில் வாழ்கின்ற, உலகத்தில் வாழ்கின்ற ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாக இருக்கின்றது. அதை நானும்,

2021 செப்டம்பர் 3] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் வரவேற்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகத்தில் சீர்திருத்தக் கருத்துகளுக்காகவும், தமிழுக்காகவும் பணியாற்றிய பன்முக ஆற்றல் கொண்ட அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு வட சென்னையில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

***திரு. வி.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் அயோத்திதாசப் பண்டிதருக்கு மணிமண்டபம் அமைக்கின்ற முறையில், அயோத்திதாசப் பண்டிதர் குறித்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரத்தினச் சுருக்கமாக அவர்களுடைய பன்முக ஆற்றலைப் பற்றி வெளிப்படுத்திய அந்தப் பாங்கிற்காக நான் வெகுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அந்த வகையில், இந்திய சமூகம் சாதி, சமயமற்ற சமூகமாக மாற வேண்டுமென்று தன்னுடைய அறிவாற்றலைக் கடைசிவரை பயன்படுத்திய அயோத்திதாசப் பண்டிதருக்கு வட சென்னையில் ஒரு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

***திரு. ம. சிந்தனை செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் வரலாற்றில் இந்த நாள் மறக்க முடியாத ஒரு*

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2021 செப்டம்பர் 3

பொன்னாள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்த அறிவிப்பை ஆயிரமாயிரம் உணர்வோட்டங்களோடு, கோடானுகோடி தமிழர்களின் சார்பில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார வரவேற்கிறேன்; நன்றியோடு வரவேற்கிறேன். தனக்காக வாழ்கிறவர்கள் மரணமடைந்து விடுகிறார்கள். ஆனால், மக்களுக்காக வாழ்கிறவர்கள் மரணமடைவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், கலைஞர் அவர்கள் மரணமடையவில்லை என்கிற உணர்வை இன்று நான் பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து எனக்கு கூடுதலாக ஒரு நிமிடம் பேசுவதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலைஞர் அவர்களின் இறுதி நாள் நிகழ்விலே கலந்துகொண்டபோது, அவரது உடல் மெல்ல மெல்ல அந்தப் பெருங்கருவிகளால் உள்ளே இறக்கப்பட்டபோது நான் என்னை அறியாமல் அழுதேன். அண்ணன் திருமாவளவன் அவர்கள் என்னை ஆற்றுப்படுத்தினார்கள். கலைஞர் அவர்கள் என்கிற அடையாளத்திற்காக மட்டுமல்ல; ‘உடன்பிறப்பே’ என்கிற அந்தச் சொல்லை இனி யார் உதிர்க்கப்போகிறார்களோ (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற வேதனையோடுதான் நான் அழுகிறேன் என்று சொன்னேன். நான் இருக்கிறேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனந்தக் கண்ணீரோடு மாண்புமிகு முதல்வர் அவர்களை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நெஞ்சார நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இன்று உதிர்த்த ஒவ்வொரு வார்த்தைகளும், வரலாற்றுச் சிறப்புமிக்க வார்த்தைகள்.

1907–ல் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் ‘ஒரு பைசா தமிழன்’, ‘தமிழன்’ என்கிற இதழைக் கொண்டுவந்தார். அந்த இதழுக்கு நூற்றாண்டு விழாவை நடத்தியவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில், இந்தத் தருணத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்கு மட்டுமல்ல; நான் இந்து ஆகப் பிறந்தேன், ஆனால், இந்து ஆக நான் மரணமடைய விரும்பவில்லை எனப் பிரகடனப்படுத்திய புரட்சியாளர் அம்பேத்கருக்கும் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள்தான்

2021 செப்டம்பர் 3] [திரு. ம. சிந்தனை செல்வன்]

பௌத்த மரபு என்கிற அடிப்படையில் வழிகாட்டியாக இருந்தவர். அத்தகைய பேராளுமைக்கு, தமிழ்-பௌத்த சிந்தனை மரபை தமிழுலகத்தில் அறிமுகப்படுத்திய பேராளுமைக்கு நீங்கள் உருவாக்கவிருக்கின்ற அந்த மணிமண்டபத்தை, இந்தத் தமிழ் கூறும் நல்லுலகம் இருக்கின்ற வரை, நன்றியோடு எண்ணும் என்பதைச் சொல்லி, என் சார்பிலும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலும், எழுச்சித் தமிழர், மரியாதைக்குரிய தலைவர் முனைவர் திருமாவளவன் அவர்கள் சார்பிலும், நெஞ்சார, ஆயிரமாயிரம் நன்றியோடு வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

***திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூர்வ தமிழர் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் வாழ்ந்த காலங்களில், தமிழ்ச் சமூகத்திற்கும், நூல்களுக்கும் ஓர் ஆதாரமாக விளங்கியவர். அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பது என்பது வரவேற்கத்தகுந்தது; பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியது; பாரதிய ஜனதா கட்சி அதை வரவேற்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

***திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவு ஆசான் அயோத்திதாசப் பண்டிதருக்கு வட சென்னையில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்ததை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். இப்படி, முன்னோர்களை, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்க வாழ்ந்தவர்களை, எடுத்துக்காட்டுவது வருங்காலத் தலைமுறைகளுக்கு ஒரு பாடமாக அமையும் என்பதைத்தான் இந்த நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது.*

முற்பகல் 11-00

குறிப்பாக, அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் பன்முகத் தன்மை கொண்டவர். தந்தை பெரியாருக்குப் பிறகு சமூக நீதி வரலாற்றில் அவருக்கு ஓர் இடம் உண்டு. அவருடைய எழுத்துக்களைப் படித்தவர்களுக்கு நன்கு தெரியும். அந்த அடிப்படையிலேதான் எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள்கூட சில

[திரு. ஜி.கே. மணி] [2021 செப்டம்பர் 3

நிகழ்வுகளிலே பேசும்பொழுது அயோத்திதாசப் பண்டிதரை பல இடங்களிலே குறிப்பிட்டுக் காட்டுவார்கள். அந்த அடிப்படையில் * தாம்பரம் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்டு, அங்கு அவருக்கு பெருமை சேர்க்கிற வகையில், அன்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த எங்கள் இளைஞரணித் தலைவர் அன்புமணி அவர்கள் அயோத்திதாசப் பண்டிதருக்கு சிலை நிறுவி, அயோத்திதாசப் பண்டிதர் மருத்துவமனை என அதற்குப் பெயர் சூட்டினார். மருத்துவர் அய்யா அவர்களும் நாங்கள் எல்லோரும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பெருமை சேர்த்தோம். அந்த நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள். அவருடைய வாழ்க்கை வரலாற்றை எல்லாம் எங்களுக்குச் சொன்னார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பெருமைக்குரிய அயோத்திதாசப் பண்டிதருக்கு மணிமண்டபம் அமைப்பதை பட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். நன்றி சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும், அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பல கொள்ளுப் பேரன்களில் நானும் ஒருவன் என்ற முறையிலும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அயோத்திதாசப் பண்டிதர் என்பது ஒரு சொல் அல்ல, ஒரு பெயர் அல்ல. தமிழர்களுடைய வாழ்வியல் மரபணு. அவர் சொல்லிய எழுத்துகள், அவருடைய சொல்லாயுதம்தான் இன்று இந்தியாவை ஆண்டுகொண்டிருக்கிறது என்று இராமச்சந்திர குகா, ரூமிளா தாபர் போன்ற பல அறிஞர்கள் சொல்லியிருந்தாலும், தமிழகத்திலே, தென்னிந்தியாவிலே அயோத்திதாசப் பண்டிதரை விட்டுவிட்டு தமிழ் பற்றிப் பேசமுடியாது. முதன்முதலில் கோலார் தங்கவயலில் கலப்புத் திருமணம் செய்து வைத்தவர் அயோத்திதாசப் பண்டிதர் என்று Rev. Rathinam அவர்கள் பதிவு செய்ததை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பலமுறை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

2021 செப்டம்பர் 3] [திரு. கு. செல்வபெருந்தகை]

பேசியிருக்கிறார். ஆக, இப்படிப்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவர், அவருடைய தாத்தா திரு. கந்தப்பன் அவர்கள் எல்லீஸ் துரையிடம் திருக்குறள் ஓலைச் சுவடிகளை எடுத்துக்கொண்டு போய் கொடுக்கவில்லையென்றால் நாம் திருக்குறளையே பார்த்திருக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கும். அந்த வரலாற்றுப் பதிவுகளையெல்லாம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் பதிவு செய்ததுதான் பெருமை, தமிழர்களுக்கு மிகப் பெருமை. ஆகவே, இப்படிப்பட்ட தருணத்தில் நாங்களெல்லாம் மகிழ்ச்சியடைகிறோம்; ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறோம். ஆக, தமிழர்களின் வரலாற்றைத் திருப்பிப்போடும் முதல்வராக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், தாம்பரம் சானடோரியத்தில் சித்தா மருத்துவமனை ஒன்று இருக்கிறது. 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், தமிழினத் தலைவர் முத்தமிழறிஞரிடம் நாங்கள் எல்லாம் ஒரு கோரிக்கை வைத்தோம். இதை நீங்கள், அப்போதிருந்த மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. அன்புமணி ராமதாசிடம் சொல்லி, அந்த மருத்துவமனைக்கு அயோத்திதாசப் பண்டிதர் மருத்துவமனை என பெயர் சூட்டவேண்டும் என்று கோரிக்கை வைத்தபோது, உடனே முத்தமிழறிஞர் கலைஞர் சொன்னதையடுத்து, அந்த மருத்துவமனைக்கு அயோத்திதாசப் பண்டிதர் மருத்துவமனை வளாகம் என்று பெயர் சூட்டப்பட்டது. அந்தப் பெருமையும் திராவிட முன்னேற்றக் கழக அரசைச் சாரும் என்று சொல்லி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 'தமிழன், திராவிடன்' என்ற சொற்கள் இல்லாமல் தமிழகம் இல்லை என்று சொன்னார்கள். அதே உணர்வோடுதான் தமிழைப் போற்றிய, தமிழ் மொழி காத்த தியாகச் செம்மல்களைப் போற்றவேண்டும் என்ற வகையில்தான் தேம்பாவணி என்ற நூலை எழுதிய, கான்ஸ்டன்டைன் என்ற இயற்பெயர் கொண்ட வீரமாமுனிவருக்கு தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டியில்

[திரு. கடம்பூர் ராஜு] [2021 செப்டம்பர் 3

முழு உருவ வெண்கலச் சிலையுடன் மணிமண்டபம் என்று அறிவித்தும், அதேபோன்று, சீறாப்புராணம் இயற்றிய அமுதகவி உமறுப்புலவருக்கு எட்டயபுரத்தில் ஆண்டுதோறும் அரசு விழா என்று அறிவித்தும், தமிழுக்குப் பெருமை சேர்த்த அரசு அம்மாவின் அரசு. அதேவகையில், இன்றைக்கு தமிழர்களுடைய பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்று சொல்லி, 'தமிழன் என்று சொல்லடா; தலைநிமிர்ந்து நில்லடா' என்பதற்கு அடிகோலிய அயோத்திதாசப் பண்டிதருக்கு வடசென்னையில் மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்பை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பிலே முழு மனதோடு வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பேசி முடியட்டும். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள், திரு. ஜி.கே. மணி அவர்கள், சொல்லட்டும்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் என்று சொல்வதற்குப் பதிலாக ** என்று சொல்லிவிட்டேன். அதைத் திருத்திக்கொள்ளுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி. ** என்று சொல்ல வேண்டுமா, தாம்பரம் என்று சொல்ல வேண்டுமா?

திரு. ஜி.கே. மணி: தாம்பரம் என்று சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியே தாம்பரம் என்று திருத்திக்கொள்கிறோம். நன்றி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிடன், தமிழன், தமிழனுடைய அடையாளமான பொதுமறை நூல் திருக்குறள். திருக்குறள் ஓலைச் சுவடியை அச்சேற்றுவதற்கு காரணமாக இருந்த குடும்பத்தைச் சேர்ந்த பன்முகத் தன்மை கொண்ட அயோத்திதாசப் பண்டிதருக்கு மணிமண்டபம் கட்ட வேண்டுமென்று அறிவித்த சமூக நீதியின் பாதுகாவலர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2021 செப்டம்பர் 3] [திரு. எ.வ. வேலு]

தட்டும் ஒலி) பொதுப் பணித் துறையின் சார்பாகவும், அமைச்சர் பெருமக்களின் சார்பாகவும், ஏனைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-05

5. வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய 150–வது பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுவதையொட்டி, சென்னை, காந்தி மண்டபத்தில் அன்னாரது மார்பளவு சிலை அமைத்தல், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது வழங்குதல் உள்ளிட்ட மாண்புமிகு முதலமைச்சரின் 14 அறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசியிருக்கக்கூடிய பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள், அயோத்திதாசர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்புக்கு வாழ்த்து சொல்லியிருக்கிறீர்கள்; நன்றியும் தெரிவித்திருக்கிறீர்கள்; பாராட்டும் தெரிவித்திருக்கிறீர்கள்.*

அதேநேரத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள், வ.உ.சி. அவர்களுடைய 150–ஆவது பிறந்த நாள் வருகின்றது. எனவே, அதனை அரசு விழாவாக, அவரைப் பெருமைப்படுத்தக்கூடிய வகையில் நாம் கொண்டாட வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஆற்றிய என்னுடைய முதல் சுதந்திர தின உரையிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். வ.உ.சி. அவர்களுடைய 150–ஆவது பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் அறிவித்திருக்கிறேன். அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு அவரது 150–ஆவது ஆண்டாக வருகிற காரணத்தால், 14 அறிவிப்புகளை நான் இப்போது அறிவிக்க விரும்புகிறேன்.

- *சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள வ.உ. சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு*